# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 06 செவ்வாய்க்கிழமை 22.07.2025 கதிர் 255


**இனி இது ரகசியம் அல்ல!**

செம்மணிப் புதைகுழிகள் என அடையாளம் காணப்பட்டுள்ள அரியாலை, சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் தோண்டும் பணிகள் நேற்று மீண்டும் தொடங்கின. ☞ 2

## மின்சார சபை ஊழியர்கள் இன்று சுகவீன விடுமுறைப் போராட்டம்

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு திருத்த சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று சுகவீன விடுமுறை தொழிற்சங்க போராட்டம் ஒன்றை மேற்கொள்ள இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது. இன்றைய தினத்துக்குள் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் எதிர்வரும் நாட்களில் தொழிற்சங்க போராட்டத்தை தீவிரப்படுத்துவதாக மின்சாரசபையின் சுதந்திர சேவை சங்கத்தின் தலைவர் பிரபாத் பிரியந்த தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று செய்தியாளர்களிடம் ☞ 3

## கொள்ளுப்பிட்டியில் நேற்று ரி-56 ரகத் துப்பாக்கி மீட்பு

கொழும்பு கொள்ளுப்பிட்டி இரவு நேர களியாட்ட விடுதியில் இருந்த நபர் ஒருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்வதற்காக வந்ததாக கூறப்படும் சந்தேகநபர்களின் வசமிருந்த ரி-56 ரக துப்பாக்கி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

திட்டமிட்ட குற்ற செயல்களுடன் தொடர்புடைய ஒருவரின் சகோதரரை இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் ☞ 3

# செம்மணியில் தோண்டும் பணி நேற்று மீண்டும் தொடங்கியது

## முதல் நாளிலேயே 7 எலும்புக்கூடுகள் அடையாளம்







செம்மணி மனிதப் புதைகுழியின் ஒரு பகுதியான அரியாலை,- சித்துபாத்தி இந்-து மயான மனிதப் புதைகுழிகளை தோண்டும் பணிகள் நேற்று மீண்டும் தொடங்கின. அடையாளம் காணப்பட்டுள்ள இரு குழிகளிலும் நேற்று ஒரே நேரத்தில் தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதில் இரு குழிகளிலுமாக 7 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே இந்த இரு குழிகளில் இருந்தும் 65 பேரின் எலும்புக் கூடுகள் மீட்டெடுக்கப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஜூலை 10 தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தொடர்ந்து 15 நாள்கள் அகழ்வுப் பணி இடம்பெற்ற பின்னர் தற்காலிக ஓய்வுக்காகப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஓய்வுக் காலம் முடிந்து நேற்றுப் பணிகள் மீண்டும் தொடங்கியபோது தடயவியல் அகழ்வாய்வுத்தளம் ஒன்றில் 4 மனித எலும்புக்கூடுகளும், தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இரண்டில் 3 மனித எலும்புக்கூடுகளும் அடையாளம் காணப்பட்டன. ☞ 2

# கறுப்பு ஜூலையை மழுங்கடிக்கும் செயலில் ஆளும்தரப்பு மும்முரம்

## நட்புறவுப் பாலம் என்ற பேரில் சதித்திட்டம்
## கறுப்புக்கொடி காட்ட கஜேந்திரன் அழைப்பு

தமிழர்களுக்கு எதிராக பெரும் இன அழிப்புக் கலவரம் நிகழ்த்தப்பட்ட கறுப்பு ஜூலைத் தினங்களில் நட்புறவுப் பாலம் என்ற பெயரில் தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சிங்களவர்களை அழைத்து வரும் பெரும் சதித் திட்டம் ஒன்றை அநுரவின் ஆளும்தரப்பு மேற்கொள்ளவுள்ளதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரகுமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.



தமிழ் மக்கள் அனைவரும் இதற்கெதிராக ஒன்றுதிரண்டு கறுப்புக்கொடி காட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

கொக்குவிலில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்து இதனை வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜூலை 23 என்பது தமிழ் மக்களுக்கு கறைபடிந்த ஒருநாள். இந்நாளின் வரலாற்றை மழுங்கடிக்க அநுர அரசு சதித் திட்டம் ஒன்றை மிக சாதுரியமாக நகர்த்த முயற்சிக்கின்றது.

அதாவது குறித்த தினத்தன்று தென்னிலங்கையில் இருந்து ஒரு தொகுதி நபர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவந்து இங்குள்ள அநுர அரசின் எடுபிடிகளைக் கொண்டு மக்களை ஏமாற்றி இனங்களுக் ☞ 2

## யாழ்ப்பாணத்தில் காணாமலாக்கப்பட்டோர் அறிக்கையை செம்மணியுடன் தொடர்புபடுத்தினால் உண்மை வெளிவரும்

### தமிழ் அரசுக் கட்சிச் செயலாளர் சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவினரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ள விவரங்களை தற்போது செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழியில் கண்டறியப்படும் மனித எச்சங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதன் ஊடாக பல்வேறு உண்மைகளை வெளிக்கொணரமுடியும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்கென கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் கே.எச்.கமிலஸ் பெர்னாண்டோ, ஜெமிஸா இஸ்மாயில் மற்றும் எம்.சி.எம்.இக்பால் ஆகிய உறுப்பினர்களுடன் கூடியதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2003 ஒக்டோபர் 28 ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது.

1990 - 1998 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் பதிவான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் மற்றும் அப்பகுதிகளின் வீட்டு உரிமையாளர்கள் அங்கிருந்து ☞ 3

## ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடுவதில் இலங்கை அரசு அக்கறை காட்டவேண்டும்

### மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

மனிதப்புதைகுழிகளில் கண்டறியப்படும் மனித எச்சங்கள் உள்ளிட்ட சான்றுகளை உரியவாறு பாதுகாப்பதற்கும், அது குறித்து செயற்திறன்மிக்க விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் அவசியமான போதிய நிதி, நிபுணத்துவ மற்றும் தொழில்நுட்ப வசதிகள் ஆளும்தரப்பினால் வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, வலிந்து காணாமலாக்கப்படல்களை மனிதகுலத்துக்கு எதிரான குற்றமாக வகைப்படுத்தியிருக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உரோம் பிரகடனத்தில் கைச்சாத்திடுவது குறித்து இலங்கை அவதானம் செலுத்தவேண்டும் எனப் பரிந்துரைத் ☞ 2

## இன்றைய ஜனாதிபதியும் இனப்படுகொலையாளியே

### அருட்தந்தை சக்திவேல் அறிக்கை

தற்போதைய ஜனாதிபதியும் இனப்படு கொலையாளியே. அவரின் கட்சியும் இனப்படுகொலைக் கட்சியாகச் செயற்பட்டதே வரலாறு என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக ☞ 3

## புலமைப் பரிசில் பரீட்சை இந்தாண்டு ஓகஸ்ட் 10இல்

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடாத்தப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளயிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும் புலமைப்பரிசில் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2025

நேர அட்டவணை II, ஆம் வினாப்பத்திரம் - 09.30 - ☞ 3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஏற்கனவே பணிகளில் ஈடுபட்டவர்களிற்கு மேலதிகமாக அங்கு நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் (சிஐடி) காணப்பட்டனர். இதுவரையில் யாழ்ப்பாணம் பொலிஸாரே இந்தப் புதைகுழி தொடர்பான விசாரணைகளில் பங்கெடுத்து வந்தனர். ஆனால், இப்போது இந்த விசாரணைகளை சிஐடிக்கு மாற்றும்படி பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டிருக்கிறார். அதனடிப்படையில் தற்போது விசாரணைகளை சிஐடியினர் பொறுப்பெடுத்துள்ளனர்.

இதுபோன்ற பெரியளவிலான மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த சாதாரண பொலிஸாரின் திறன் போதாது என்ற காரணத்தால் விசாரணைகள் சிஐடியினருக்கு மாற்றப்பட்டுள்ளன என்பது நியாயமானதுதான். ஆனால், இந்த விடயத்தில் விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால் அதற்கு இராணுவத்தினரின் முழுமையான ஒத்துழைப்பு மிக மிக அவசியம். அது இல்லாமல் கடைசிவரையில் இந்த வழக்குகளில் முன்னேற்றம் ஏற்படப்போவதில்லை.

கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் படுகொலை வழக்கைக் கையாண்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதி இந்த விடயத்தைத் தனது நேர்காணல் ஒன்றில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். கொழும்பில் இருந்து இந்த வழக்கைக் கையாள்வதற்காக அப்போதைய சட்ட மா அதிபர் சரத் என். சில்வாவினால் (பின்னர் சர்ச்சைக்குரிய பிரதம நீதியரசராக இருந்தவர்) சிறப்புப் பிரதிநிதியாக அனுப்பப்பட்ட அவர், யாழ்ப்பாணம் வந்தவுடனேயே இராணுவத்தினரின் ஒத்துழைப்பு இன்றி கிருஷாந்தியின் வழக்கு விசாரணையை முன்னெடுக்கவே முடியாது என்பதைத் தான் புரிந்துகொண்டார் என்று தெரிவித்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணம் வரும்போது கிருஷாந்தியின் வழக்கும் சிஐடியினரின் விசாரணையில்தான் இருந்தது. இருப்பினும் இந்த வழக்கில் இராணுவத்தின் ஒத்துழைப்பு இன்றி சிஐடியினரால் துரும்பைக்கூட அசைக்க முடியாது என்று தனக்குத் தெளிவாகத் தெரிந்தது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதன் பின்னர் அப்போது இராணுவப் பொலிஸாரின் கட்டளை அதிகாரியாக இருந்த கேணல் தர அதிகாரி ஒருவருக்கு நிலமையின் விபரீதத்தை விளக்கியும், ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டையும், சர்வதேச அழுத்தத்தையும் அவருக்குப் புரிய வைத்தும், அவரை இது விடயத்தில் இணங்க வைத்த பின்னரே வழக்கு விசாரணை முன்னகரத் தொடங்கியது என்றும் அவர் அந்த நேர்காணலில் மேலும் தெரிவித்தார்.

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கில் இராணுவப் பொலிஸார் பதிவு செய்த வாக்குமூலங்களே குற்றவாளிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. அந்த வாக்குமூலங்களை ஆதரிக்கும் வகையில் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களமும் சிஐடியினரும் சில சாட்சியங்களையும் நீதிமன்றத்தில் முன்வைத்தனர்.

இப்படிப்பட்ட பின்புலத்தில் தற்போதைய செம்மணி விசாரணைகளிலும் சிஐடியினரால் ஏற்படக்கூடிய முன்னேற்றம் என்பது மிக மிகச் சொற்பமானவையே. இராணுவத்தின் ஒத்துழைப்பு இன்றி இந்த விசாரணைகளை முன்னகர்த்துவது மிகச் சிரமமானது. எனவே விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய வகையில் இராணுவக் கட்டளைப் பீடங்களில் மாற்றங்களையும் தெளிவான அறிவுறுத்தல்களையும் வழங்காமல் இந்த விசாரணைகளில் குற்றவாளிகளை நெருங்குவதற்கான வாய்ப்புக்கள் உருவாகப்போவதில்லை என்தே யதார்த்தம்.

ஆளும்தரப்பு இந்த விசாரணைகளில் உண்மையான அக்கறை கொண்டிருக்குமாயின், நீதியை நிலைநாட்டுவதில் உறுதியோடு இருக்குமாயின் விசாரணைகளுக்கு இராணுவ ஒத்துழைப்பைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதே மிக முக்கியமானது. அது இன்றி இந்த வழக்கை சிஐடியினர் விசாரித்தும் உருப்படியான விளைவுகள் துர்பலமே!.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கறுப்பு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்குவதாகக் கூறி நட்புறவுப் பாலம் என்ற நிகழ்வை நடத்த முயற்சிக்கின்றது.

இது தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்கு சர்வேச குற்றவியல் விசாரணையை மேற்கொள்ள முயற்சிக்கும்போது அதைச் சிதைப்பதற்கு அல்லது திசை திருப்பும் நகர்வாகவே இருக்கின்றது.

அநுர அரசின் இந்த சதியில் சிக்காது தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருபது வேண்டியது அவசியமாகும். இந்த நட்புறவுக்கு கொண்டாட்டத்தை கொண்டாடுவதானது

1983 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும் இனப்படுகொலையை மூடி மறைப்பதற்கான ஒரு தந்துரோபாயமாகவே இது இருக்கின்றது.

கடந்தகாலங்களில் இருந்த ஆட்சியாளர்கள் எல்லாம் இந்த விடயத்திற்கு தீர்வைக் கொடுக்காவிட்டாலும் அதை இல்லாதொழிக்க முயற்சிக்கவில்லை. நினைவேந்தல்களை கண்டுகொள்ளாமல் இருந்தன. அனால் அநுர அரசோ இந்த விடயத்தை நீர்த்துப்போகச் செய்ய முழுமூச்சாக செயற்படுகின்றது.

குறிப்பாக இந்தப் படுகொலைகளுக்குத் தீர்வு கொடுப்பதில் தாம் உன்னிப்பாக இருப்பது என்பதை காட்டுவது போல ஒரு மாயை உருவாக்கி தமிழ் மக்களின் அழிவுகளை மூடி மறைக்க முயற்சிக்கின்றது.

அது மட்டுமல்லாது சர்வேச விசாரணை அல்லது போர் குற்ற விசாரணை தேவையற்ற விடயம் என்பதை சர்வதேசத்திற்கு காட்டுவதற்கு முயற்சிக்கின்றது. அந்த முயற்சிக்கான ஒரு நகரவாகவே இந்த நட்புறவுக் கொண்டாட்டம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகின்றது

இது அநுர அரசன் ஒரு சதித்திட்டமாகவே இருக்கின்றது. தென்னிலங்கையிலிருந்து வரவுள்ளவர்களுடன் இங்குள்ள அநுர அரசின் எடுபிடிகளின் முயற்சிக்கு எமது மக்கள் உடன் போகக்கூடாது. அன்றைய நாளை கறைபடிந்த நாளாக நாம் அனைவரும் கதுப்புக்கொடி கட்டி துக்கத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம் என்றும் தெரிவித்தார்.

## செம்மணியில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் நீதிவான் ஆனந்தராஜாவின் முன்னிலையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவா, சட்டவைத்திய அதிகாரி பிரணவன் ஆகியோரின் பங்கேற்போடு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## ரோம்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் 29 ஆவது கூட்டம் எளதிர்வரும் செப்டெம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தின்போது சகல நபர்களையும் வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனத்தின்கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது பற்றி அக்குழுவினால் மீளாய்வு செய்யப்படும்.

இந்நிலையில் இலங்கை தொடர்பில் அக்குழுவினால் வெளியிடப்படவுள்ள அறிக்கைக்கு சமாந்தரமாக, சகல நபர்களையும் வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனத்தின்கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளின் அமுலாக்கம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 25 பக்க அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில், 'நபரொருவரை வலிந்து காணாமலாக்குவது மிகப்பாரிய மனித உரிமை மீறலாகும். இவ்வாறான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் இலங்கையின் சகல பாகங்களிலும் இடம்பெற்றிருப்பதுடன் அவற்றின் விளைவாக அனைத்துச் சமூகங்களை சேர்ந்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளன. வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் உண்மையையும், பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துமாறு கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர், செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகளால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை அங்கீகரிக்கிறோம். குறிப்பாக பொருளாதார நெருக்கடிகள், ஏனைய பொறுப்புக்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் நெருக்கடிகள் என்பவற்றுக்கு மத்தியிலும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச்சேர்ந்த பெண்கள் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன' என மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தல், சுதந்திரம் மறுக்கப்படும் இடங்களைக் கண்காணித்தல், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளடங்கலாக ஏனைய அரச கட்டமைப்புக்களுடன் தொடர்புகளைப்பேணல், கொள்கை மறுசீரமைப்பை ஊக்குவித்தல், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய விடயங்களில் கடந்த காலங்களிலும், அண்மைய நாட்களிலும் தம்மால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு அவ்வறிக்கையில் விரிவாகத் தெளிவுபடுத்தியுள்ளது.

அதேபோன்று வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணைகள் மற்றும் 2003, 2006, 2012 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் பற்றிய விபரங்களும் அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்தோடு கடந்த ஆண்டு கோனபினுவல கபில குமார டி சில்வா வலிந்து காணாமலாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் பற்றிய உண்மைத்தகவல்கள் மற்றும் அவ்விவகாரத்தில் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் என்பனவும் மேற்படி அறிக்கையில் உள்வாங்கப்பட்டிருப்பதுடன் அரச அதிகாரிகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகள் என்பன உள்ளடங்கலாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களும், சிவில் சமூக

தொடர்ச்சி 3ம் பக்கம்....

# லஞ்சம், ஊழல் தொடர்பில் 2,138 குற்றச்சாட்டுக்கள்

## 45 குற்றவாளிகள் பிடிபட்டனர்

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இந்த ஆண்டில் 2,138 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதில் 45 பேர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் ஆம் திகதி முதல் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 44 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.

இதன்போது ஊழல் மோசடி குற்றச்சாட்டில் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 8 பேர் பொலிஸ் உத்தியோகத்தர்களாவர்.

இதனிடையே கடந்த 6 மாதங்களில் இலஞ்சம், ஊழல், சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்தாமை மற்றும் சட்டவிரோத சொத்து குவிப்பு உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 42 வழக்குகள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த காலப்பகுதியில் 45 பேர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# எம்.சீ.சீ. திட்டத்தை ஏற்றிருந்தால் இன்று அமெ. வரி வந்திருக்காது

## ஐ.தே.க. தவிசாளர் தெரிவிப்பு

ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்து அமெரிக்காவின் எம்.சீ.சீ. திட்டத்தை நாட்டுக்கு கொண்டுவந்து அதன் மூலம் 415 பில்லியன் டொலரை நன்கொடையாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துவந்தார். இந்தத திட்டத்தை செயற்படுத்த நாட்டு மக்கள் அன்று இடமளித்திருந்தால், ஆசியாவிலே வரி நிவாரணம் கிடைக்கும் முதலாவது நாடாக இலங்கை தெரிவாகி இருக்கும். அமெரிக்காவின் தீர்வை வரி அதிகரிப்பும் எமக்கு பிரச்சினையாகி இருக்காது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியால் அதிகரிக்கப்பட்டுள்ள தீர்வை வரி அதிகரிப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிகக ஜனாதிபதியினால் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வரி தொடர்பில் இலங்கை மக்கள் மிகவும் புரிதலுடன் செயற்பட வேண்டும். இந்த எச்சரிக்கை தொடர்பில் ரணில் விக்ரமசிங்கவுக்க வரலாறு பூராகவும் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார். அதனால்தான் அவர் 2015 ஆட்சி காலத்தின் போதும் அதற்குப் பிறகும் மில்லேனியம் செலஞ்ச் கார்ப்பரேஷன் திட்டத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்த முயன்றார். எனது நினைவின் பிரகாரம், அமெரிக்காவிலிருந்து 415 பில்லியன் டா லரை நன்கொடையாக பெற்றுக்கொள்ள ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துவந்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் இருந்த பல்வேறு குழுக்கள் செயற்பட்ட விதம் தொடர்பில் இலங்கை மக்கள் மீள நினைத்துப்பார்க்க வேண்டும். ரணில் விக்ரமசிங்க பிரதமராகவும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் செயற்பட்ட சந்தர்ப்பத்தில், இந்த விடயத்தில் செயற்படுத்த நாட்டு மக்கள் இடமளித்திருந்தால், ஆசியாவிலே வரி நிவாரணம் கிடைக்கும் முதலாவது நாடாக இலங்கை தெரிவாகி இருக்கும்.

அமெரிக்காவின் வரி விதிப்பு, நூற்றுக்கு 44 வீதத்தில் இருந்து 30வீதம் வரை குறைந்திருப்பதாக பலவரும் தெரிவிக்கின்றனர். இது வெட்கப்பட வேண்டிய விடயம் என்றே நான் தெரிவிக்கிறேன். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நேரகாலத்துடன் சர்வதேசத்தின் நடவடிக்கைகளை புரிந்துகொள்ள முடியுமான அரச தலைவர்கள் நாட்டை நிர்வகிப்பது முக்கியமாகும். இப்போது நாங்கள் எதை பேசினாலும் பிரயோசனம் இல்லை. ஏனெனில் அமெரிக்கா இலங்கைக்கு எம்.சீ.சீ ஊடாக நன்கொடை வழங்கும்போது இலங்கை எவ்வாறு செயற்பட்டது என டொனல்ட் ட்ரம்புக்கு தெரியும்.

அமெரிக்காவின் இந்த நன்கொடையை பெற்றுக்கொள்ளும்போது சிலர் அநுராதபுரத்துக்கு செல்ல, திருகோணமலைக்கு செல்ல விசா எடுக்க வேண்டி ஏற்படும் என்றார்கள். இவ்வாறு நாட்டொன்றை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. இப்போது அதன் நட்டத்தை ஒட்டுமொத்த இலங்கை மக்களும் அனுபவித்துவருகின்றனர்.

உண்மையில் இது கலந்துரையாடுவதற்கு இருந்த விடயம் ஒன்று அல்ல. இந்த விடயத்தை முன்கூட்டியே ரணில் விக்ரமசிங்க கண்டுகொண்டதால் உலக அரசியல், அவ்வாறு இல்லாவிட்டால் ஆசியாவின் அரசியல் தொடர்பில் தெளிவு இருப்பதால்தான் அவர் நேரகாலத்துடன் தயாராகுவதற்கு முயறி சித்தார். என்றாலும் அதற்கு இடமளிக்கவில்லை. அந்த நடவடிக்கையை இல்லாமலாக்கினார்கள். தற்போது சிறிய, சிறிய கலந்துரையாடல்கள் மூலமாவது மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறது. இதனை முதலாவது சந்தர்ப்பத்திலே செயற்படுத்தி இருந்தால், இந்த வெற்றியை பெற்றுக்கொள்வது வியட்னாமோ அல்லது ஆசியாவில் வேறு எந்த நாடும் அல்ல. இலங்கையே ஆசியாவில் பலமான நாடாக இருந்திக்கும்.

எது எவ்வாறு இருந்தாலும் இலங்கை மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டி இருப்பது, இந்த பிரச்சினை ஏற்படுவதற்கு முன்னர், இந்த பிரச்சினையை தீர்க்க முடியுமான அரச தலைவர்களை நீக்கிவிட்டு, இன்று பொது மக்கள் கஷ்டப்படுகின்றனர் என்பதாகும் என்றார்.

## ஆளும்தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாட்டாளர்களும் முகங்கொடுத்துவரும் சவால்கள் தொடர்பிலும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

'கடந்தகால விசாரணை ஆணைக்குழுக்களில் சுமார் 27,000 க்கும் மேற்பட்ட வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவாகியிருப்பதுடன், இதுகுறித்து காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்துக்கு 21,000 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதுமாத்திரமன்றி 2009 மேமாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் பாதுகாப்புப்படையினரிடம் சரணடைந்த சுமார் 1000 க்கும் மேற்பட்டோர் காணாமல்போயிருப்பதாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கஆணைக்குழுவின்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது' என்றும் மனித உரிமைகள்ஆணைக்குழுவின்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சகல நபர்களையும் வலிந்து காணாமலாக்கப்படல்களிலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான 11 பரிந்துரைகளையும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் அறிக்கையில் முன்வைத்துள்ளது.

கோனபினுவல கபில குமார டி சில்வா வலிந்து காணாமலாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் வலிந்து காணாமலாக்கப்படல் சட்டத்தின்கீழ் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்தல், வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்குமான பரந்துபட்ட அதிகாரங்களைக்கொண்ட புதிய நிரந்தர கட்டமைப்பொன்றை ஸ்தாபித்தல், 'பரந்துபட்ட மற்றும் திட்டமிட்ட வலிந்து காணாமலாக்கப்படலை' வலிந்து காணாமலாக்கப்படல் சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட குற்றமாக உள்ளடக்கல், வலிந்துகாணாமலாக்கப்படலால்பாதிக்கப்பட்ட நபருக்கு சர்வதேச நியமங்களின் பிரகாரம் வழங்கப்படவேண்டிய இழப்பீட்டுக் கொடுப்பனவை நிர்ணயம் செய்தல், மனிதப்புதைகுழிகளில் கண்டறியப்படும் மனித எச்சங்கள் உள்ளிட்ட சான்றுகளை உரியவாறுபாதுகாப்பதற்கும்,செயற்திறன்மிக்க விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் ஏதுவானவகையில்போதியநிதி, நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்கல், வலிந்து காணாமலாக்கப்படல் சட்டம் மற்றும் பிரகடனத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பில் பொலிஸார்மற்றும்பாதுகாப்புப்படையினருக்கு உரியவாறு தெளிவூட்டல், பரந்துபட்ட மற்றும் திட்டமிட்டவலிந்துகாணாமலாக்கப்படல்களை மனிதகுலத்துக்கு எதிரான குற்றமாக வகைப்படுத்தியிருக்கும்சர்வதேசகுற்றவியல் நீதிமன்றத்தின் உரோம் பிரகடனத்தில் கைச்சாத்திடுவது குறித்துஅவதானம்செலுத்தல் என்பனவே அப்பரிந்துரைகளாகும்.

## புலமைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10.45 மணி

I ஆம் வினாப்பத்திரம் - 11.15 - 12.15 மணி

மேற்படிபரீட்சை 2025 ஓகஸ்ட் 10ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் 2787 பரீட்சைநிலையங்களில்நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பரீட்சைக்காக விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளினதும் வரவு இடாப்புகள் உரிய பாடசாலை அதிபர்களுக்குத் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரையில் வரவு இடாப்பு கிடைக்கப்பெறாத பாடசாலை அதிபர்கள் www.doenets.lk இற்குப் பிரவேசித்து 'எமது சேவை' இன் கீழுள்ள சிமுழிது ஹுாஜகூஷீலிஷதுழிமிஷ்லிஜ ளீளஜமிஷள' இன் மீது சொடுக்குவதன் மூலமோ அல்லது http//onlineexams.gov.lk.eic இற்குப் பிரவேசிப்பதன் மூலமோ வரவு இடாப்பைத் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

அங்கு குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் தகவல்களில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டி இருப்பின் 2025 ஜூலை 25 ஆம் திகதி தொடக்கம் 2025 ஓகஸ்ட் 04 ஆம் திகதி வரை நிகழ்நிலையில்அதனைமேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றேன்.

## கொள்ளுப்பிட்டியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட இருந்ததாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில்அமைந்துள்ள இரவு நேரக் களியாட்ட விடுதிக்கு வருகை தந்த ஒருவரை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் நேற்றுமுன்தினம் அதிகாலை இந்தத் துப்பாக்கி சூட்டை நடத்தவிருந்தனர்.

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாராத லக்மன் பிரேமசந்திர படுகொலையுடன் தொடர்பில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தெமட்டகொட சமிந்த என்பவரின் சகோதரான திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் ருவன் என்பவரை இலக்கு வைத்தே இந்த துப்பாக்கிசூடு மேற்க்கொள்ளப்படவிருந்ததாகதெரியவருகிறது.

தெமட்டகொட ருவன் என்பவர் குறித்த இரவு நேர களியாட்ட விடுதிக்கு தொடர்ச்சியாக வந்து போகிறவர் எனவும் நேற்றுமுன்தினம் அவர் அங்கு செல்வதற்கு தாமதம் ஏற்பட்டதாகவும் அறிய முடிகிறது.

இந்நிலையில் குறித்த நபர் களியாட்ட விடுதிக்குள் இருக்கிறாரா என்பதை அறிய துப்பாக்கிதாரி, துப்பாக்கியுடன் களியாட்ட விடுதிக்குள் நுழைவதற்கு முயற்சித்த போது அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தருடன் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது ஏற்பட்ட பதற்ற நிலைமை காரணமாக குறித்த துப்பாக்கிதாரிகள் இருவரும் துப்பாக்கி மற்றும் மோட்டார்சைக்கிளை கைவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். சந்தேகநபர்கள் தப்பிச் செல்லும் காட்சிகள் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி காட்சிகள் பதிவாகியிருந்தன. மேலும் 25 தோட்டாக்கள் அடங்கியமெகசின் இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவின் உதவிப் பணிப்பாளர் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஒலுகல தலைமையில் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்றப்பட்டமை என்பன தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப்பட்ட இக்குழுவின் அறிக்கையில், 1990 - 1998 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணாமலாக்கப்பட்டோரின் பெயர், வயது, காணாமலாக்கப்பட்ட ஆண்டு, இறுதியாகச் சென்றிருந்த இடம், நேரடி சாட்சி, முறைப்பாடு அளித்தவர் விபரம் உள்ளிட்ட அவசியமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே இதுபற்றிச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அவ்வறிக்கையில் உள்ள விவரங்களையும் தற்போது செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழியில் கண்டறியப்படும் மனித எச்சங்கள் பற்றிய விவரங்களையும்ஒன்றிணைத்துஆராய்வதன் ஊடாகஇம்மனிதஎச்சங்களுக்குச்சொந்தமான நபர்கள்தொடர்பானபல்வேறுஉண்மைகளை வெளிக்கொணரமுடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

## இன்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:

சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்கள்தமிழ்இனப்படுகொலைக்கான தருணம் பார்த்திருந்து அதனை வழிநடத்த அரசியல்வாதிகளை நேரடியாகக் களத்தில் இறக்கியதோடு பௌத்த துறவிகளையும், குண்டர்களையும், அடிமட்ட சிங்கள மக்களையும்ஏவிதமிழர்களின்அவலக்குரலும் அவர்களின்சாம்பலிலும்மகிழ்ந்தகருப்புஜூலை 83ஐ தொடர்ந்து 42 ஆண்டுகளாக பல்வேறு வடிவங்களில் இனப்படுகொலை நிகழ்த்திக் கொண்டிருக்கையிலும் 'இனப்படுகொலை நிகழவில்லை' என கூறுவதோடு 'சமூக புதைகுழிகளை தோண்ட தேவை இல்லை' எனக் கூறுவதும் இனப்படுகொலையில் நீட்சியின் கோரம் மட்டுமல்ல, நீதி, நியாயம், உண்மை, பௌத்த தர்மம் என்பவற்றை சமூகபுதைகுழிக்குள்தள்ளியதன்வெளிப்பாடு எனவும் கூறலாம்.

ஜெ.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் 6/5 பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த ஐக்கிய தேசிய கட்சி ஆளும்தரப்பு அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையால் பாதிக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கம் அரசாங்கத்துக்கு எதிராக 1980 இல் நடத்திய வேலைநிறுத்த போராட்டத்தினை அராஜகமாக அடக்கி ஒடுக்கி அது மீண்டும் எழுச்சி கொள்ளாதிருக்க இன அழிப்பு நாடகத்தினை 1983 ஜூலையில் நிறைவேற்றியதோடு தமிழ் இளைஞர் கையில் ஆயுதத்தையும் திணித்து சிங்கள தொழிலாளர் வர்க்கத்தையும் கிராமிய சிங்கள இளைஞர்களையும் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பி நாட்டை அழிவிற்குள் தள்ளினர்.

வடக்கு கிழக்கு தமிழர் தேசத்திற்கு வெளியே தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்து தீட்டு கொளுத்தியவர்கள் பச்சிளம் பாலகர்கள், வாலிபர்கள் வயது முதிர்ந்தோர் கண்ணில்கண்டோரை தாக்கியும் 3000க்கும் அதிகமானோரை வெட்டியும், குத்தியும் தீக்குள் தள்ளியும் இனப்படுகொலை செய்து வெறியாட்டம் நடத்தினர். இதற்கு அரசு வளங்களும்படையினரும்பாவிக்கப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

இதனைத் தொடர்ந்து தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இதுவே நடந்தது.

இனப்படுகொலையின் உச்சம் 2009ல் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தபோதும் அதில் திருப்தி கொள்ளாத சிங்களப் பேரினவாதம் தொடர்ந்தும் பல்வேறு வடிவங்களில் இன அழிப்பு இனப்படுகொலை என்பவற்றை தொடர்ந்துகொண்டே இருப்பதை நாம் அவதானிக்கின்றோம்.

ஒரு தடவை புத்த பெருமான் தம்மிடம் வந்த ஒரு தாயிடம் 'மரணம் நிகழாத வீட்டில் இருந்து ஒருபிடி எள் கொண்டு வாருங்கள்' என்றார். அது போன்று சர்வதேச சமூகமும் ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடமும் கேட்கின்றோம். இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் கூறுங்கள் 'தமிழர் தாயகத்தில் இனப்படுகொலை நிகழாத கிராமத்திலிருந்தும், அதனால் பாதிக்கப்படாத குடும்பங்களில் இருந்தும், கண்ணீர் சிந்தாத மக்களிடமிருந்தும் ஒரு பிடி நெல் கொண்டு வாருங்கள் என்று கூறுங்கள். அவர்களால் அதனை செய்ய முடியாது. காரணம் தற்போதைய ஜனாதிபதியும் இனப்படுகொலையாளியே. அவரின் கட்சியும் இனப்படுகொலை கட்சியாக செயற்பட்டதே வரலாறு.

தமிழர்களைப் பொறுத்தவரை நாட்டில் 1983ஆம் ஆண்டு ஜூலை மட்டுமல்ல கறுப்பு. இந்த நாட்டின் சுதந்திரம், அரசியல் யாப்பு, பயங்கரவாத தடை சட்டம், அரசியல் யாப்பின் 13ஆம் திருத்தம் எனபவற்றோடு ஆட்சியில் அமரும் அத்தனை அரசாங்கங்களும் பேரினவாத கடும் கருப்பே. இவர்களிடமிருந்து தமிழர்களுக்கு எந்த நீதியும் கிட்டப் போவதில்லை.

ஆதலால் 1983 கறுப்பு ஜூலையின் 42ஆம் நினைவாண்டில் சர்வதேச வல்லரசுகளே, ஐ.நா மன்றமே, ஐ.நா மனித உரிமை பேரவையே உங்கள் அரசியல் காக குற்றவாளிகள் கூண்டில் இருக்கும் இலங்கை ஆளும்தரப்பு தமிழர்களுக்கான நீதியை கையளிக்காது; சுதந்திர தேசமாய் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசு இனப்படுகொலை புரிந்துள்ளது என்பதை ஏற்றுக்கொண்டு, இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவதோடு தமிழர்களுக்கான அரசியல் நீதிக்கு வழி விடுமாறும் கோரிக்கை விடுக்கின்றோம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு மேற்கொள்ள இருக்கும் இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு திருத்த சட்டமூலத்தால் ஊடாக மின்சார பாவனையாளர்களுக்கோ மின்சாரசபை ஊழியர்களுக்கோ எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையின் மூலம் தற்போது மின்சாரசபையை 6 பங்குகளாக பிரிக்கப்படும். அடுத்துவரும் ஓரிரு வருடங்களில் இது தனியார் மயமாகும் வகையில் 25, 30 பங்குகளாக பிரிக்கப்படும். அவ்வாறானதொரு மறுசீரமைப்பே தற்போது முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மின்சாரசபை மறுசீரமைப்பு திருத்த சட்டமூலத்தை முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர கொண்டுவரும்போது, இந்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, அதனை பற்றவைத்து, கிழித்தெரிந்து, புதிய சட்டமூலம்கொண்டுவருவதாகதெரிவித்தஇந்த ஆளும்தரப்பு, தற்போது அந்த சட்டமூலத்தில் சில வசனங்களை மாற்றம் செய்து, காஞ்சன விஜேசேகர கொண்டுவந்த சட்டமூலத்தையே மீண்டும் கொண்டுவந்திருக்கிறது.

மின்சாரசபை சட்டமூலம் ஒன்றைத் தயாரிக்க முடியுமான அறிவுடைய யாரும் இந்த ஆளும்தரப்பில் இல்லையா எனக் கேட்கிறோம். மின்சக்தி அமைச்சர் மின்சார சபை தொழிற்சங்கம், ஊழியர்களுக்கு முகம்கொடுப்பதில்லை, கலந்துரையாட இடமளிப்பதில்லை, கடிதங்களுக்கு பதிலளிக்காமல், வேறு சிலருக்கு இந்த நடவடிக்கையை கையளித்துவிட்டு மறைந்து செயற்படுகிறார்.

அதனால் மின்சாரசபை ஊழியர்கள் சுகயீன விடுறை அறிவித்துவிட்டு இன்று காலை 10 மணிக்கு கொழும்புக்கு வர தீர்மானித்திருக்கின்றனர். சேவை பாதுகாப்பு, மின்சார பாவனையாளர்களை எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையிலான சட்டபூர்வ ஒப்பந்தம் ஒன்றுக்கு மின்சாரசபை ஊழியர்களுடன் வரவேண்டும் என்றே நாங்கள் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கிறோம். ஆளும்தரப்பு முறையான பதில் ஒன்றை வழங்காவிட்டால் இன்று மாலையாகும்போது எமது தொழிற்சங்க போராட்டத்தை மேலும் தீவிரமாக்குவோம் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கை ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்

இலங்கையில் நீண்ட காலப் போருக்குப் பின்னர் நிலவிய அமைதி காலம், நாட்டின் மீளமைப்பிற்கும், மனித உரிமை பாதுகாப்பிற்கும் முக்கியமான காலமாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் இதுவரையில் அப்படி நிகழவில்லை. நிலைமாறுகால நீதி, மீள நிகழாமை என்பன இதுவரையில் உறுதிப்படுத்தப்படவேயில்லை. போரின் போது நிகழ்ந்ததாக கூறப்படும் மனித உரிமை மீறல்களும், இனப்படுகொலைக் குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்களும் இன்னும் நீதி பெறாமலேயே இருக்கின்றன.

இந்நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஞூஜமிளஷஜழிமிஷ்லிஜழியி ளீஷஷ்துஷ்ஜழியி ளீலிற்ஷமி) தொடர்பான ரோம் உடன்படிக்கையில் இலங்கை அரசு கையெழுத்திட வேண்டுமென, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்திருப்பது மிக முக்கியமான ஒன்றாகும். இது எளிய பரிந்துரை அல்ல; காலப்போக்கிலும், வரலாற்று பொறுப்பும், நீதியின் தேடலும் ஒருங்கிணையும் ஒரு கோரிக்கையாகவே இதைப் பார்க்க வேண்டும்.

இருபதாண்டுகளுக்கு மேற்பட்ட பூர்வ அனுபவங்களில் இருந்து, தமிழர்கள் சர்வதேச நீதியை நாட வேண்டிய கட்டாயத்திற்கு மாட்டப்பட்டுள்ளனர். உள்ளூர் விசாரணைகளும் ஆணைக்குழுக்களும் பலமுறை அமைக்கப்பட்ட போதிலும், அது வழக்காகவே சுயரூபமாகக் கலைக்கப்பட்டன. இதனால், நியாயமான விசாரணை கிடைக்கும் எனும் நம்பிக்கையை தமிழர்கள் இழந்துள்ளனர்.

இவ்வாறு உள்ளாட்சி முறைநீதி முறைகள் முற்றாக தோல்வியடைந்த நிலையில்தான், சர்வதேச விசாரணை என்பது மிக அவசியமாகின்றது. அதற்கான வழியையே ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திடும் செயல் திறக்கின்றது. இந்த உடன்படிக்கையின் கீழ், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள் உள்ளிட்டவை சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணைக்குட்பட முடியும்.

இன்று இலங்கை ஆளும்தரப்பு, உண்மையில் இலங்கையின் மீளெழுச்சியையும், இன நல்லிணக்கத்தையும் விரும்பினால், அது சர்வதேசம் முன் தன்னுடைய பொறுப்புணர்வை நிரூபிக்க வேண்டியுள்ளது. அதற்கான முதல் படியாகவே, ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திடுதல் அமையக்கூடும்.

இது உண்மையான பொறுப்பு ஜனநாயகப் பண்பாட்டின் வெளிப்பாடாக இருக்கலாம். அதைவிடுத்து, இது வெறுமனே சர்வதேச அழுத்தங்களை சமாளிக்கும் உத்தியாக இருக்கக்கூடாது. பொதுவாகவும், தமிழர்கள் குறிப்பாகவும் எதிர்பார்க்கும் நீதிக்கான பாதையைத் இது திறக்கவேண்டும் என்பதே இங்கே முக்கியக் கோணமாக இருக்கின்றது.

எனவே, இனப்படுகொலைகளை மறக்க முடியாத இந்நாட்டில், எதிர்கால தலைமுறைகளுக்குப் பொறுப்புடனான சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில், இலங்கை அரசு ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பினராக சேரவேண்டும். இது நீதிக்கும் நியாயத்திற்குமான பாதையைத் திறக்கும்.

## விளையாட்டுத்துறை முன்னாள் செயலரின் மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு ஏற்பு

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது, அரசியல் நோக்கங்களுக்காக 14,000 கேரம் பலகைகள் மற்றும் 11,000 தாம் பலகைகளை கொள்முதல் செய்து, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்சவின் அரசியல் அலுவலகங்களுக்கு விநியோகித்ததன் மூலம் அரசநிதியைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு உடந்தையாக இருந்தார்கள் எனக்கூறி, சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகைகளை ரத்து செய்யக் கோரி, விளையாட்டு அமைச்சின் முன்னாள் செயலாளர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவாரச்சி தாக்கல் செய்த மனுவை ஜூலை 28 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரோஹாந்த அபேசூரிய மற்றும் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த மனுவை ஜூலை 28 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. சட்டத்தரணி அமில குமார் மூலம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தான் ஒரு சாட்சியாக மட்டுமே பெயரிடப்பட்டதாக மனுதாரர் கூறியுள்ளார். அவர் அந்த வழக்கில் மேல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார் எனவும் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், இந்த விவகாரத்தில் தன்னை பிரதிவாதியாகப் பெயரிட சட்டமா அதிபர் எடுத்த முடிவு சட்டத்திற்கு முற்றிலும் முரணானது என மனுதாரர் வாதிட்டார்.

அதன்படி, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை ரத்து செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தை மனுதாரர் கோரினார்.

## உடவலவ வாவியில் மீன்பிடித்த இரு இளைஞர்கள் மூழ்கிச் சாவு

உடவலவ பனஹடுவ வாவியில் டியுப் ஒன்றை பயன்படுத்தி மீன்பிடிக்கச் சென்ற இரு இளைஞர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் மற்றைய நபர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

அத்தோடு வியானா வாவியில் விழுந்த பெண் ஒருவரும் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடவலவ பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பனஹடுவ வாவியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீன்பிடிக்கச் சென்ற இருவர் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தனர். சம்பவத்தை அடுத்து பிரதேசவாசிகள் உயிர் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவ சுழியோடிகள் ஆகியோர் மேற்கொண்ட தேடுதலின் போது உயிரிழந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

டியூப் ஒன்றை பயன்படுத்தி இருவரும் வாவியில் மீன்பிடிப்பதற்காக சென்றுள்ள நிலையில் எதிர்பாராத விதமாக டியூபிலிருந்து தவறி விழுந்து நீரில் மூழ்கியுள்ளனர். பிரதேசவாசி ஒருவர் குறித்த இளைஞர்கள் இருவரும் நீரில் மூழ்கியதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளார். பனஹடுவ பகுதியை சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதுடன் அதேபகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபர் காணாமல் போயுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வியானா வாவியின் கரையில் உள்ள கால்வாயின் மேல் நடந்துச் சென்ற நபர் தடுக்கி வாயினுள் விழுந்து, நீரோட்டத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளார். இதன்போது அந்நபருடன் இருந்த யுவதி அவரை காப்பற்றுவதற்காக வாவியில் பாய்ந்த நிலையில் இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். எவ்வாறெனினும் மஹியங்கனை பொலிஸ் பயிற்சி நிலைய அதிகாரி ஒருவரும் அவரது மனைவியும் இணைந்து நீரில் நீரில் அடித்துச்செல்லப்பட்ட நபரை காப்பாற்றியுள்ளனர்.

எனினும் துரதிஷ்டவசமாக குறித்த பெண் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 26 வயதுடைய அம்பாந்தோட்டை பகுதியை சேர்ந்த ரஜரட்ட பல்கலைக்கழக மாணவி ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். பல்கலைக்கழகத்திலிருந்து அம்மாணவியை வீட்டிற்கு அழைத்துச் சென்றுக் கொண்டிருந்த போதே இவ்விபத்து நிகழ்ந்ததாக காப்பாற்றப்பட்ட இளைஞர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உயிர் பாதுகாப்பு அதிகாரிகள் , சுழியோடிப் படைப் பிரிவு அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் பொலிஸார் தொடர்ந்தும் காணாமல் போனவர்கள் தொடர்பில் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீதுவையில் நேற்றிரவு துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

சீதுவை பகுதியில் நேற்றிரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சீதுவை, ராஜபக்ஸபுரவில் உள்ள 12ஆவது ஒழுங்கை பகுதியில் இரவு 8.15 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சீதுவை நகரசபையில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் நகர சபை உறுப்பினர் ஒருவரின் தந்தையை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 55 வயது நபர் ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் என தெரிவிக்கப்படும் நிலையில், துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

நீர்கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் சீதுவை பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

# எதிர்க்கட்சி எம்.பி. ஒருவருக்கு சட்டவிரோத வாகனத்தை விற்ற முன்னாள் அமைச்சர்

கடந்த ஆளும்தரப்பிலிருந்த அமைச்சர் ஒருவர் எதிர்கட்சியிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வாகனம் ஒன்றை விற்பனை செய்துள்ளார். இருவரும் பிரதான இரு கட்சிகளை சேர்ந்தவர்கள். அவர்கள் ஆட்சியிலிருந்தமையால் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காது இரகசியமாக சட்டத்துக்கு புறம்பாக கொண்டுவரப்பட்ட வானக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளனர் என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

களுத்துறை மாவட்டத்தில் உள்ள 10-12 சதவீதமானோர் வீடுகளின்றியே வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறன மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ள விசேட நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கமை 155 குடும்பங்களுக்கு வீட்டு நிர்மாணத் திட்டத்துக்கான நிவாரணம் வழங்கப்பட உள்ளது. இதற்காக 155 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 42 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. குறித்த நிவாரணத் தொகையைக் கொண்டு அம்மக்கள் தமது இருப்பிடங்களை அமைத்துக் கொள்ள முடியும்.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள பெருந்தோட்டப் பகுதிகளை சேர்ந்த 4 ஆயிரம் குடும்பங்களின் இருப்பிடங்கள் தொடர்பான சிக்கல்களுக்கு உடனடியாக தீர்வுக்காண வேண்டியுள்ளது. அதற்கமைய இங்கிரிய றைகம தோட்டத்தில் உள்ள 25 குடும்பங்களுக்கு இந்திய காப்புறுதி வீட்டுத் திட்டத்தின் கீழ் 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீடமைப்பு நிர்மாண அதிகார சபையின் நிதியுதவி மற்றும் கடன் உதவி திட்டத்தின் கீழ் பொருந்தோட்ட வீடமைப்புத் தொடர்பான விசேட திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் அரச ஊழியர்களுக்காக தொடர்மாடிக் குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்கவும் எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

நபர் ஒருவர் நீண்ட காலம் தனக்கான வீடு ஒன்றை நிர்மானித்துக்கொள்ள படுபடுவாராயின், அவரால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வலு சேர்க்க முடியாது. ஆகையால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தடைக்கல்லாக உள்ள இவ்வாறான சுமைகளை குறைப்பது அவசியம். சமீப நாட்களாக சட்டத்திற்கு புறம்பாக வாகனங்களை வைத்திருப்பவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் யார் தொடர்புப்பட்டுள்ளார்கள்? கடந்த அரசாங்கத்திலிருந்த அமைச்சர் ஒருவர் எதிர்கட்சிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வாகனம் ஒன்றை விற்பனை செய்துள்ளார்.

இருவரும் பிரதான இரு கட்சிகளை சேர்ந்தவர்கள். முன்னரே இவ்வாறான ஊழல் தொடர்பில் ஏன் வெளிப்படுத்தப்படவில்லை என கேட்க வேண்டாம். அவர்கள் ஆட்சியில் இருந்தமையால் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காது இரகசியமாக சட்டத்துக்குப் புறம்பாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட வாகன கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளனர். கடந்த அரசாங்கத்தினர் தமது வியாபாரங்களுக்காக மாத்திரமே ஆட்சி செய்தனர். எனினும் நாம் மக்களுக்கு செயல்படும் ஆளும்தரப்பு, அதற்காகவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து உள்ளோம் என்றார்.

# முன்னாள் அமைச்சர் ரோஹிதவின் மகள், மருமகனுக்கு பயணத் தடை

முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள் மற்றும் மருமகனுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதித்து மத்துகம நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் (வலான ஊழல் தடுப்புப் பிரிவு) கோரிக்கையை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகன் ரசிக விதான, தவறான தரவுகளுடன் பதிவு செய்யப்பட்ட ஜீப் தொடர்பாக சமீபத்தில் கைது செய்யப்பட்டார்.

குறித்த ஜீப்பை ஆய்வு செய்ததில், அது சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு, தவறான தரவுகளை சமர்ப்பித்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தை சேர்ந்த ஒருவர் இந்த சட்டவிரோத செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஜகத் விதானவுக்குச் சொந்தமான தனியார் நிறுவனத்தின் பெயரில் இரண்டாவது முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஜீப்பை, அவரது பிரதிநிதி பயன்படுத்தியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விசாரணையின் போது, கைது செய்யப்பட்ட ரசிக விதான, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள் ரொசெல் மெலனி அபேகுணவர்தனவிடமிருந்து ஜீப்பை வாங்கியதாகக் கூறினார்.

அந்த வாக்குமூலத்திற்கு அமைய, கடந்த 19 ஆம் திகதி மதியம் களுத்துறை, நாகொடவில் உள்ள ரொசெல் மெலனி அபேகுணவர்தனவின் வீட்டிற்கு பொலிஸார் சென்ற போதும், அவரும் அவரது கணவரும் அங்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள் மற்றும் மருமகனுக்கு வெளிநாட்டு பயணத் தடையை மதுகம நீதவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.




Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2025இல் வெளியிடப்பெற்றது